பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 27 வியாழக்கிழமை 14.12.2023 அதிர்வு 136

## இரு வயோதிபர்கள் மயங்கி வீழ்ந்து சாவு


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இருவேறு இடங்களில் திடீரென மயங்கி வீழ்ந்து வயோதிபர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சங்கானை பகுதியில் உள்ள அரைக்கும் ஆலையில், அரைக்கக் கொடுத்து 04

# கீரிமலை ஜனாதிபதி மாளிகை பகுதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம்

## நாளை தொடக்கம் அளவீடு என அறிவிப்பு



(ந.லோகதயாளன்)

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபி விருத்தி அதிகார சபையிடம் கைய ளிக்கும் நோக்கில் நாளை அளவீடு செய்யப்படவுள்ளது என்று அறிவிக் கப்பட்டுள்ளது

நில அளவைத் திணைக்களத்தின் நில அளவையாளர் செ.லத்தீபனால் இந்தப் பகிரங்க அறிவித்தல் வெளி யிடப்பட்டுள்ளது.

இதற்கமைய தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கே சன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் 12.0399 கெக்டேயர் 04

### சைவ சமய அடையாளங்கள் விடுவிக்கப்படாமல்

# கீரிமலை மாளிகையைப் பொறுப்பேற்று சைவ சமயத்தின் சாபத்துக்கு ஆளாகாதீர்



### ஆறு.திருமுருகன் நல்லுபதேசம்

(ந.லோகதயாளன்)

யாழ்., கீரிமலையில் ஜனாதிபதி மாளிகையை அண்டியுள்ள சைவ சமய அடையாளங்கள் விடுவிக் கப்படாமல் தனியார் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் வழங்க முற்பட்டால் அதனைப் பெற்று சைவ சமயத்தின் சாபத்துக்கு ஆளாக எவரும் விரும்பக்கூடாது என்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் நல்லை ஆதீனத் தின் செயலாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04

## யாழ். வந்த நடிகை ரம்பா மானிப்பாயில் வழிபாடு




(எஸ்.நிதர்ஷன்)

தென்னிந்திய தமிழ் நடிகை ரம்பா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தனது குடும்பத்துடன் மானிப்பாய், 04

## நாளை முதல் ஒரு வாரத்துக்கு வடக்கு - கிழக்கில் கனமழை

(ந.லோகதயாளன்)

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே நாளை (15 காற்றுச் சுழற்சி உருவாகுகின்றது. இதனால் நாளை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று வளிமண்டலவியல் 04

# ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழில் மீனவர்கள் கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கடற்றொழிலாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத் தில் இன்று கையெழுத்துப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இலங்கை கடற்றொழிலாளர்களின் நிலைப்பாடு எனும் தலைப்பில் சேகரிக் கப்படும் கையெழுத்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன. 04





### இந்நாடு சிங்கள நாடல்ல, தமிழ் நாடுமல்ல

# இலங்கை என்ற பன்மைத்துவ நாடே ஆரம்பப் புள்ளியாக இருக்கவேண்டும்

### தேரர்களிடமும், உலகத் தமிழர் பேரவையிடமும் மனோ கோரிக்கை

“இலங்கை என்ற எம் தாய்நாடு, ஒரு “சிங்கள பௌத்த நாடு” என்ற தமக்கு மட்டுமே என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான “தனித் தமிழ் நாடு” என்ற சிந்தனையும் மறைய வேண்டும். சகலருக்கும் சொந்தமான, இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டும்.”

– இவ்வாறு நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற சிறந்த இலங்கைக்கான சங்க (பௌத்த) மன்றம், உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புகளுடனான சந்திப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், பௌசி, திகாம்பரம், வேலுகுமார், உதயகுமார், தவ்பிக் ஆகியோரும் கலந்துகொண்ட இந் நிகழ்வு பற்றி ஊடகங்களுடன் உரையாடிய மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:–

“சிங்கள – பௌத்த நாடு என்ற சிந்தனை, இலங்கையில் நிரந்தர அமைதி, வளர்ச்சி, மகிழ்ச்சி ஏற்படத் தடையாக இருக்கின்றது எனச் சந்திப்பில் கலந்துக்கொண்ட தேரர்களை நோக்கி சிங்கள மொழியில் கூறினேன். அதேவேளை இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான தனித் தமிழ் நாடு என்ற சிந்தனையும் மறைய வேண்டும் எனச் சந்திப்பில் கலந்துகொண்ட உலகத் தமிழர் பேரவை அங்கத்தவர்களை நோக்கி தமிழிலும், ஆங்கிலத்திலும் கூறினேன்.

உங்களது இந்த முயற்சியை நாம் வரவேற்கின்றோம். அரசியல்வாதிகளை, அரசியல் கட்சிகளை விலத்தி வைத்து விட்டு நேரடியாக நீங்கள் இந்த முயற்சி செய்வதும் இந்த முதற்கட்டத்தில் சரிதான். முதல் கட்டத்தை வெற்றிகரமாக கடந்து விட்டால், அடுத்த கட்டத்தில் அது அரசியல் கட்சிகளிடம்தான் வரவேண்டும். நாடாளுமன்றத்தில்தான் இன்றைய சட்டங்கள் திருத்தப்பட முடியும். புதிய சட்டங்கள் உருவாக்கப்பட முடியும். ஆகவே, அது வரும்போது வரட்டும்.

ஆனால், இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையே உங்கள் நடவடிக்கைக்கு ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டும். இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற தமக்கு மட்டுமே என்ற சிந்தனை மறைய வேண்டும். இந்நாட்டின் இன்னொரு பிரதேசத்தில் இது தமிழருக்கு மட்டுமேயான தனித் தமிழ்நாடு என்ற சிந்தனையும் மறைய வேண்டும். இந்த அடிப்படை ஆரம்ப புள்ளியாக ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் இந்த முயற்சிபயனற்றதாகி விடும்.

“76 விகிதம் சீனர்களைக் கொண்ட சிங்கப்பூர், அரசியல் சட்டப்படி தம்நாட்டு பன்மைத்துவத்தைக் கொண்டாட முடியும் என்றால், ஏன் இலங்கையில் எம்மால் அதைக் கொண்டாட முடியாது?” என்ற கேள்வியை முயற்சியில் ஈடுபடும் தேரர்களை நோக்கி நான் எழுப்பவில்லை. ஏனெனில் இம்முயற்சி வெற்றி பெறுவது பெருமளவில் அவர்கள் தரப்பில்தான் உள்ளது என்பது எனது அபிப்பிராயம். முதலிலேயே அவர்களைத் தளர்வடையச் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால், அடுத்த முறை இதை நான் கேட்பேன். இத்தகைய கேள்விகளை ஏற்கனவே நாடாளுமன்றத்திலும், உள்நாட்டு மேடைகளிலும் நான் பலமுறை எழுப்பியுள்ளேன்.” – என்றார்.







# மீசாலை இராமாவில் பகுதியில் மின் ஒழுக்கில் கடை எரிந்து நாசம்



மீசாலை இராமாவில் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் கடைத்தொகுதி முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை (13) இரவு 10:45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதனால் கடைத் தொகுதியில் இருந்த பொருட்கள் அனைத்தும் தீக்கி ரையாகி உள்ளன. அதனையடுத்து தீயணைப்பு படையினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மின் ஒழுக்கே தீ விபத்துக்கு காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அதன் காரணமாக குறித்த பகுதியில் நேற்று இரவு ஒன்றரை மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டு இருந்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் கைது

**(மன்னார் நிருபர்)**

சிலாவத்துறை கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த 07 பேர் கடற்படையினரால் நேற்று புதன்கிழமை (13) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது சிலாவத்துறை கடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நீரில் மூழ்கி கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த நிலையில் 07 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன் போது 02 படகுகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சுமார் 874 கடல் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்த 22 வயதுக்கும் 48 வயதுக்கு இடைப்பட்டவர்கள் ஆவர். 07 பேரும் அவர்களின் உடைமைகள் மற்றும் கடல் அட்டைகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாவத்துறை கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரு வயோதிபர்கள்...**

விட்டு, கதிரையில் காத்திருந்தவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அவரை மீட்டு சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சேர்த்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொன்னாலை மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த இரட்ணம் அருளானந்தம் (வயது 69) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, பலாலி பகுதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மயங்கி வீழ்ந்த வயோதிபரை வீதியால் சென்றவர்கள் மீட்டு, தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவான் வடக்கைச் சேர்ந்த செல்வம் சிவானந்தம் (வயது 81) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இரு சம்பவங்களும் நேற்று இடம்பெற்றுள்ளன.

**கீரிமலை ஜனாதிபதி...**

( 29 ஏக்கர்) நிலம் அளவீடு செய்யப்படவுள்ளது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான் மற்றும் புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளிலேயே இந்த நில அளவீடு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை முதல் தொடர்ச்சியாக இந்த அளவீடு இடம்பெறும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஐந்து அம்ச...**

வரைவு கடற்றொழில் சட்டத்தை நிராகரிக்கின்றோம், இலங்கைக் கடற்பரப்பில் வெளிநாட்டு கடற்றொழில் கப்பல்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம், கடல் உணவு இறக்குமதியால் உள்ளூர் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் கடல் உணவு இறக்குமதியை எதிர்க்கின்றோம், கடற்றொழில் சமூகத்திற்கு 2024 இற்கான வரவு – செலவுத் திட்டத்தில் போதிய ஒதுக்கீடு இன்மையையும் பொருத்தமற்ற அரச கொள்கைகளையும் மாற்றியமைத்து கடற்றொழில் வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறுகின்றோம், கடந்த பல வருடங்களாக இந்திய இழுவைமடிப் படகுகளால் பாதிக்கப்பட்டுவரும் வட இலங்கை கடற்றொழில் சமூகங்களுக்கும் நியாயமான தீர்வுகளை முன்னெடுக்குமாறு கூறுகின்றோம் – என்பதே ஐந்து அம்சக் கோரிக்கையாகும்.

“கடந்த பல வருடங்களாகப் பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா நெருக்கடியால் கடற்றொழில் சமூகம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இவ்வாறான துயர் மத்தியில் வாழும் கடற்றொழில் சமூகத்தை மேலும் பாதிக்கும் அரச கொள்கைகளை மாற்றி எமது சமூகத்துக்கு விடிவு வழங்குமாறு கேட்டு இந்த மகஜரைக் கையளிக்கின்றோம்.” – என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

**கீரிமலை மாளிகையை...**

“யாழ்ப்பாணம் மாவட்டம், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் நகுலேஸ்வரம், காங்கேசன்துறை கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி மஹிந்த ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை தமிழ் மக்களின் எதிர்ப்பால் பயன்படுத்தாமல் தவிர்த்து வந்தனர். இருப்பினும் அதனை அண்டிய பகுதிகளைத் தொடர்ந்தும் ஆட்சி செய்யவும், தமக்கான நிதியீட்டலைத் தேடவும், தமிழர்களின் குறிப்பாக சைவ சமயத்தவர்களின் எதிர்ப்பைத் திசை திருப்பும் வகையிலும் அப்பகுதியை ஒரு தமிழரிடம் அதுவும் ஒருசைவப் பெருமகனாரிடம் முதலீடு என்னும் பெயரில் வழங்கும் சூழ்ச்சி இடம்பெறுவதாகவே நாம் கருதுகின்றோம்.

எனவே, இப்பகுதியில் உள்ள 7 சைவ சின்னங்களும் விடுவிக்க நாம் எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் இதுவரை நிறைவேறாத நிலையில் அப்பகுதிகளைப் பெற்று தொழில் புரிய எவர் முனைந்தாலோ அல்லது உறுதுணை புரிந்தாலோ அது சைவ சமயத்துக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே நாம் பார்க்கின்றோம் எனப் பகிரங்க வெளியில் கூறி வைக்க விரும்புகின்றோம்.” – என்றார்.

**நாளைமுதல்...**

திணைக்களம் அறிவித்துள்ளது.

காற்றுச் சுழற்சி வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்புள்ளது. இதன் நகர்வுப் பாதை தொடர்பில் எதிர்வரும் 16ஆம் திகதிக்குப் பின்னரே உறுதியாகக் கூற முடியும்.

இந்தக் காற்றுச் சுழற்சி காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இக் கனமழை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புக்கள் உள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் மிகக் கன மழைக்கு வாய்ப்புள்ளது.

இம்மழை நாளை (15) முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை தொடர்வதற்கான வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**யாழ். வந்த...**

மருதடி பிள்ளையார் கோயிலில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நடிகை ரம்பாவின் கணவர் இந்திரகுமார் பத்மநாதன் யாழ்ப்பாணம், மானிப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா முதலீட்டாளராவார்.

இவரின் முயற்சியாக யாழ்ப்பாணத்தில் நொதேர்ன் யுனி தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நொதேர்ன் யுனியின் அனுசரணையில் டிசம்பர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம், முற்றவெளியில் தென்னிந்தியப் பாடகர் ஹரிஹரன் பங்கேற்கவுள்ள பிரம்மாண்டமான இலவச இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இதேவேளை, புதிதாக உருவாக்கப்பட்ட நொதேர்ன் யுனியில் சமய சம்பிரதாயபூர்வமாக பால் காய்ச்சி இன்றைய தினம் சாமி படம் வைக்கப்படுகின்றது.







# மொனராகல பிரதேச விவசாயி எலிக்காய்ச்சலால் உயிரிழப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மொனராகல மாவட்டத்தைச் சேர்ந்த கொவிந்துபுர பிரதேச நான்கு பிள்ளைகளின் தந்தையான 73 வயதுடைய களுவாகே றொபின் என்ற விவசாயி உயிரிழந்துள்ளார்.

வயல் நிலங்களில் வேலை செய்வோருக்கு ஏற்படக் கூடிய இந்த நோயால் இந்த மாவட்டத்தில் மேலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

எலிக்காய்ச்சல் நோய் அடையாளம் காணப்பட்ட இந்த விவசாயி சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக




சிகிச்சைக்காக மொனராகல பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# தமிழீழ வைப்பகத்திலிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகளுக்கு நேர்ந்தது என்ன?

**உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை**

தமிழீழ வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட பலகோடி பெறுமதியாக தங்க நகைகளுக்கு நேர்ந்தது என்ன. தமது நகை தமக்கு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டு இருக்கின்றனர்.

ஆகவே கைப்பற்றிய தங்கங்களை இலங்கை அரசு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (13) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,




2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த நிலையில் வன்னி பகுதியில் இருந்து எமது தேசத்தின் அரசு கோலோச்சிய பகுதியில் இருந்து பல கோடி பெறுமதியான தங்கங்கள் மீட்கப்பட்டு அவை கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன.

தமிழீழ வைப்பகத்தில் அடகு வைக்கப்பட்டிருந்த மற்றும் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த தங்கங்கள் பாதுகாப்பான முறையில் உரியவர்களின் பெயர் மற்றும் முகவரி குறிக்கப்பட்டு, பாதுகாப்பாகப் பொதியிடப்பட்டிருந்தது என்று அரசு அப்போது அறிவித்திருந்தது.

இவ்வாறு இலங்கை அரசால் கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் தமக்கு மீளவும் கிடைக்கும் என்று தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள். ஆனால் இன்று வரை உரியவர்களுக்கு அவர் களின் தங்கம் கையளிக்கப்படவில்லை.

தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த தங்கம் பற்றி வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த பெண்மணி ஒருவர் என்னை தொடர்புக்கொண்டு 'தமது நகைகளுக்கு நேர்ந்தது என்ன,அவை கிடைக்காதா' என்று வினவினார்.

மீட்கப்பட்ட தங்கங்களுக்கு என்ன நேர்ந்தது. ஏன் உரியவர்களிடம் கையளிப்படவில்லை. ஆகவே உரியவர்களிடம் அவர்களின் நகைகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.

# வர்த்தக நிலையத்தை உடைத்து திருடிய சந்தேகத்தில் மூவர் கைது!

யாழ்ப்பாணம், அச்சுவேலி - புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையத்தை உடைத்து அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையடித்து சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேர் நேற்று முன்தினம் (12) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த 20 - 30 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கொள்ளையடித்த சில பொருள்களும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருந்த வாளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும் அச்சுவேலி பொலிஸாரும் இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபர்களை இன்றைய தினம் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். கடந்த 10 ஆம் திகதி புத்தூர் பகுதி யில் உள்ள வர்த்தக நிலையம் உடைக் கப்பட்டு சிசிடிவி கமரா, ரிவி, சிகரெட் பெட்டிகள், தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் என பல பொருள்கள் திருடப் பட்டுள்ளன என்று உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வெட்கமில்லா நடவடிக்கை

இலங்கை அரசியல்வாதிகளின் தனித்துவச் சிறப்பு அல்லது விசேட தகுதி என்னவென்று கேட்டால் முன்னுக்கு பின் முரணாக செயல்படுவதும் கருத்து வெளியிடுவதும்தான் என்று சுலபமாகக் கூறி விடலாம்.

அதற்கு அவர்களுக்கு எந்தக் கூச்ச நாச்சமும் இருக்காது.

நேற்று கூறியதை இன்று மறுதலிப்பர். நேற்று கூறியமைக்கு மாறாக இன்று நடந்து கொள்வர். அப்படி செயல்படுவதில் - நடந்து கொள்வதில் - அவர்களுக்கு வெட்கம், மானம், ரோஷம், சூடு, சுரணை எதுவும் கிடையாது.

தானும் அந்த ரகத்தை சேர்ந்தவர்தான் என்பதை புதிய விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் ஒரு தடவை இப்போது நிரூபித்திருக்கின்றார்.

இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகம் தொடர்பான பிரச்சினை நாட்டின் தேசியச் சிக்கல் போல அரசியல் ரீதியில் உருவெடுத்திருக்கின்றது. தென்னிலங்கை அரசியலில் அது முக்கிய பேசுபொருள்.

அந்த விவகாரத்திலேயே புதிய விளையாட்டுத் துறை அமைச்சர் சின்னத்தனமாக நடந்து இருக்கிறார்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் பெரும் ஊழல், முறைகேடுகள், மோசடிகள் என்று குற்றம் சுமத்தப்படுகிறது. பெரும் சூதாட்டக்காரர்களின் கைகளில் அது சிக்கி மோசடிகள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன என்று புகார் கூறப்படுகின்றது.

இந்த குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். குறை கூறுவதற்கும் குற்றம் சுமத்துவதற்கும் வேறு காரண காரியங்கள் கூட இருக்கலாம். ஆனால் இப்போது அதுவல்ல விடயம்.

இந்த நாட்டில் கிரிக்கெட் நிர்வாகம் ஊழல் மற்றும் மோசடிகளில் சிக்கிக் கிடக்கின்றது, அது மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு தீர்மானம் இலங்கையின் நாடாளுமன்றத்தில் சில வாரங்களுக்கு முன்னர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் கூட, அப்போது விளையாட்டுத் துறை அமைச்சராக இல்லாத நிலையில், தாமும் சேர்ந்தே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார் என்பதை மறக்கக்கூடாது.

அப்படிக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கிரிக்கெட் நிர்வாகத்தை இடைநிறுத்தி, மாற்று இடைக்கால நிர்வாகம் ஒன்றை முன்னாள் விளையாட்டு துறை அமைச்சர் ரெஷான் ரணசிங்க நியமித்திருந்தார். அக்காரணத்தினாலேயே அவர் பின்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி ஹரீன் பெர்னாண்டோவிற்கு வழங்கப்பட்டது.

புதிய விளையாட்டுத் துறை அமைச்சர் முன்னாள் அமைச்சர் நியமித்த இடைக்கால நிர்வாகத்தை கலைத்தமை மட்டுமல்லாமல், இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகம் மீண்டும் தன்பாட்டில் இயங்குமென அறிவித்திருக்கின்றார்.

இது, அவரும் சேர்ந்து சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு முற்றிலும் முரணான நடவடிக்கையாகும்.

முன்னுக்குப் பின் முரணாக நடப்பதில்தான் இலங்கை அரசியல்வாதிகளுக்கு வெட்கம், ரோஷம், மானம், சூடு, சொரணை எதுவும் கிடையாதே...! ஹரீன் பெர்னாண்டோ தாமும் அதற்கு விதிவிலக்கு அல்லர் என்பதை தமது இந்த நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தி இருக்கின்றார். அவ்வளவுதான்...!

# கால்நடைகளை மட்டு. மேய்ச்சல் தரை பகுதியில் கொன்றழிப்போரைத் தேடி பொலிஸார் வேட்டை!

**(கனகராசா சரவணன்)**

மட்டு. மேய்ச்சல் தரை மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் கால்நடைகள் தொடர்ந்து திருடிவருபவர்கள் கொன்றழிப்பவர்களைத் தேடி, 50 பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் சுற்றி வளைத்துத் தேடும் விசேட நடவடிக்கையை நேற்று புதன்கிழமை(13) முன்னெடுத்தனர்.

மேய்ச்சல் தரைப் பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறிய சிங்கள மக்கள் சேனை பயிர் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரி கால்நடை வளர்ப்பு பண்ணையாளர் சங்கம் தொடர்ந்து 90 நாள்களாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு எதிராக மகாவலி அதிகாரசபை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து அவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்து உத்தரவிட்டது.

இதேவேளை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கால்நடை பண்ணையாளர்களின் கோரிக்கைக்கு இணங்க மயிலத்தமடு பகுதியில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு கடந்த ஒக்ரோபர் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வறான நிலையில் அந்தப் பகுதியில் கால்நடைகள் திட்டமிட்டு துப்பாக்கியால் சுட்டும் மின்சார வேலிகள், மற்றும் வாய்வெடி, வாளால் வெட்டியும் சுமார் 100 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்து போயின.

சட்டவிரோமாக குடியேறி சேனை பயிர் செய்கையில் ஈடுபடும் சிங்கள வர்களால் அண்மை காலமாக தினமும் ஒன்று என்ற வீதத்தில் கால்நடைகள் கொல்லப்பட்டுகிறது என்று பண்ணையாளர்களால் குற்றச்சாட்டு தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் சட்டவிரோத உள்ளூர் துப்பாக்கியுடன் இருவரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது உயிரிழந்த நிலையில் 3 கால்நடைகள் எந்தவிதமாக காயங்களும் இல்லாமல் உயிரிழந்த நிலையல் இருந்துள்ளன. அந்த பகுதியில் அனுமதி பெற்று சேனைபயிர் செய்கையில் ஈடுபட்டுவரும் 3 பேரை விசாரணைக்காக அழைத்து வந்து விசாரணையின் பின்னர் விடுவித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# சம்மாந்துறையில் டேலண்ட் ப்ளஸ் ஊடக விருது!

(மாளிகைக்காடு நிருபர்)

சம்மாந்துறை டேலண்ட் ப்ளஸ் கலை, இலக்கிய, ஊடக வலையமைப்பால் சாதனையாளர்கள், திறமையானவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வலையமைப்பின் ஸ்தாபகர் அல் ஹாபிழ் ரிஷான் முஹம்மட் சில்ஹான் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் சம்மாந்துறை டேலண்ட் ப்ளஸ் கலை, இலக்கிய, ஊடக வலையமைப்பால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள், ஏனைய கல்விசார் சாதனையாளர்கள், ஊடகவியலாளர்கள், கலை, இலக்கிய ஆளுமைகள் எனப்பலரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ. ஜெகதீசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் ஏ. மன்சூர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். நஸீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலர் எஸ்.எல். எம்.ஹனீபா, இறக்காமம் பிரதேச செயலர் எம்.எஸ். எம். ரஸ்ஸான், சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், சம்மாந்துறை வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். எச். எம்.ஆஸாத், இலங்கை உயர்தொழிநுட்பவியல் நிர்வக பணிப்பாளர் எஸ்.எல். முஸ்தபா, இலங்கை உயர்தொழிநுட்பவியல் நிர்வக பிரதம கணக்காளர் எஸ்.ஏ. ஜிப்ரி உட்பட முக்கிய அரச உயரதிகாரிகள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரமுகர் கள், சம்மாந்துறை முச்சபை நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிராந்தியத்தின் முன்னணி ஊடகவியலாளர்களான நூருல் ஹுதா உமர், பாரூக் ஷிஹான், றியாத் ஏ மஜீத், ஐ.எல்.எம். நாஸிம், எம். பி.எம்.ரிம்ஸான், ஏ.கே. ஜௌபர் ஆகியோருக்கு ஊடகத்துறைக்கான கௌரவமும் தாருஸபா ஊடகவலையமைப்புக்கு ஊடக நிறுவன விருதும், பிரதேச அறிவிப்பாளர்களுக்கு அறிவிப்பாளர் கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டன.







### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த

# இளம் கவிஞர் ஜஸீமின் விடுதலைக்கு சர்வதேச மன்னிப்புச்சபை வரவேற்பு




இளம் கவிஞர் அஹ்னாப் ஜஸீமை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்து மேல் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு தொடர்பில் வரவேற்பு தெரிவித்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, கடந்த நவம்பர் மாதம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் இடம்பெற்ற கைதுகள் குறித்து தீவிர கரிசனையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

தன்னிடம் கற்ற மாணவர்களுக்கு தீவிரவாதத்தைப் போதித்தார் எனக் கூறி கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளம் கவிஞர் அஹ்னாப் ஜஸீமை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலும் இருந்து விடுதலை செய்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை புத்தளம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுகுறித்து தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் (டுவிட்டர்) செய்திருக்கும் பதிவிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. அப்பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அஹ்னாப் ஜஸீமின் வழக்கில் மேல் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்பதுடன், இது நீதிக்குக் கிடைத்த வெற்றியுமாகும். இருப்பினும் அஹ்னாப் ஜஸீம் தடுத்துவைக்கப்பட்டிருந்த 2020 மே - 2021 டிசம்பர் வரையான காலப்பகுதியில் உரிய வழக்கு விசாரணை செயன்முறை மற்றும் சட்டத்தரணியை சந்திப்பதற்கான வாய்ப்பு என்பன மறுக்கப்பட்டமையுடன், வாக்குமூலம் வழங்குமாறும் அவர் வற்புறுத்தப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் அஹ்னாப் ஜஸீமின் விடுதலையானது பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஏனையோர் தமக்குரிய நீதியை வென்றெடுப்பதற்கான வாய்ப்பை வழங்கவேண்டும்.

அதேவேளை இக்காரணங்களினாலேயே கடந்த நவம்பர் மாதம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் இடம்பெற்ற கைதுகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனையை வெளிப்படுத்தியிருந்தோம். இலங்கை பயங்கரவாதத்தடைச் சட்டத்தை உடனடியாக நீக்கவேண்டும். இருப்பினும் அதனை நீக்குவதற்கு முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகள் சர்வதேச மனித உரிமைகள் தராதரங்களுக்கு ஏற்புடையவையாக அமையாததனால், பயங்கரவாதத்தடைச்சட்டப் பிரயோகத்தை அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்தவேண்டும். - என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



# குஞ்சிகோடலிகல்லு குளத்தின் அணைக்கட்டு மழையால் சேதம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பிரதேசத்திலுள்ள பிரதான குளமான குஞ்சிகோடலிகல்லு குளத்தின் அணைக்கட்டு பலத்த மழை காரணமாக நாளாந்தம் சேதமடைந்து வருகிறது. அருகிலுள்ள கிராமங்களில் வாழும் குடும்பங்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இந்தக் குளத்தின் அணைக்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தால் சுமார் 35 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. எனினும் தொடர்ச்சியான பராமரிப்பு இன்மையால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது என்று ஒட்டிசுட்டான் விவசாய அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் குளத்தின் அணைக்கட்டிலுள்ள மண் அதிக மழை வீழ்ச்சி காரணமாக தினசரி கழுவிப்பட்டு செல்வதால் குளத்தின் நீர்க்கொள்ளளவும் குறைந்துள்ளது. அணைக்கட்டின் அடிவாரத்தில் குடியிருக்கும் ஏழு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3200 குடும்பங்களின் நிலைப்பாடும் கேள்விக்குறியாக மாறியுள்ளது. சுமார் 800 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களும் நீரால் அடித்துச் செல்லப்படலாம் என்ற அச்சமும் தோன்றியுள்ளது என்று ஒட்டிசுட்டான் விவசாய அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# நாவற்சோலை கிராம மக்களின் பாவனைக்கு கிணறு அமைப்பு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – நாவற்சோலை கிராம மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக கிணறு அமைத்துப் பொதுமக்களுக்குக் கையளிக்கப்பட்டது.

இது சுனாமியால் பாதிக்கப்பட்ட வறிய மக்கள் குடியேறிய ஓர் கிராமம் ஆகும். இது திருகோணமலை – முல்லைத்தீவு வீதியில், திருகோணமலை நகரில் இருந்து வடக்குப் பக்கமாக 24 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு 600 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றன.

இங்கு மக்கள் குடியேறிய பொழுது தொண்டு நிறுவனங்கள் இரண்டு கிணறுகளை அமைத்துக் கொடுத்தன.

அவற்றில் இருந்தே இந்த ஊருக்குக் குடி தண்ணீர் வழங்கப்படுகின்றது. இந்தக் கிணறுகளில் ஊறும் நீர், மக்களது தேவைக்குப் போதுமானதாக இல்லை.

இந்தச் சூழ்நிலையில் குச்சவெளிப் பிரதேச செயலாளர் இவ்வூர் மக்களுக்கு குடி தண்ணீர் வழங்குவதற்கு ஒரு கிணறு அமைத்துத் தருமாறு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் பதினைந்து லட்சம் ரூபா செலவில் 24 அடி ஆழமும் 18 அடி விட்டமும் கொண்ட கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது. குச்சவெளிப் பிரதேச செயலர் இந்தக் கிணற்றைப் பார்வையிட்டதுடன் பொது மக்களிடம் அதைக் கையளித்தார்.

இந்தக் கிணற்றை அமைப்பதற்கான நிதியைக் கனடாவில் வாழும் வேலுப்பிள்ளை தங்கவேலு வழங்கியுள்ளார்.

# சாஹிரா பழைய மாணவர் கட்டாரில் கௌரவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்துக்குக் "ஸ்கை தமிழ் விருது- 2023" விழாவில் கட்டாரில் வைத்து கௌரவமளிக்கப்பட்டது.

இலங்கை கிழக்கு மாகாணத்தின் தலைசிறந்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் கட்டாரில் செயற்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பானது பல சமூக சேவைகளையும் தாய்ப் பாடசாலைக்குத் தேவையான பல உட்கட்டமைப்பு வசதிகளையும் கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக இந்த அமைப்பைத் திறம்பட வழிநடத்தி வந்த அதன் முன்னாள் தலைவர் எம். ஐ. பைரூஸ், இலங்கை மற்றும் இந்திய கட்டார் வாழ் ஆளுமைகளைக் கௌரவிக்கும் "ஸ்கை தமிழ் விருது- 2023" விழாவில், கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ரஷீத் எம். பியாஸால் கௌரவிக்கப்பட்டார்.







# பாலமுனையில் நடைப் பயிற்சி!

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தை கட்டி எழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் பாலமுனை ரைஸ்டார் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நடைப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது.

கழகத்தின் உப தலைவர் ஏ.எல். எம்.சீத் தலைமையில் துறைமுக வீதியில் இடம் பெற்ற நிகழ்வின் அதிதிகளாக கழகத்தின் ஸ்தாபக தலைவர் யு.எல். கலீலுர்றஹ்மான், கழகத்தின் ஆலோசகர் இறைவரி திணைக்களத்தின் பிரதம ஆணையாளர் எம்.எம்.முஸம்மில், சட்ட வைத்திய அதிகாரி எஸ்.எம். றிபாஸ்தீன், முன்னாள் தலைவர், ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ், கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர் விடுதி அத்தியட்சகர் எஸ்.எல்.றஹ்மத்துல்லாஹ், ஆலோசகர் கலாநிதி ஏ.எச்.றிபாஸ், ஸ்தாபக உறுப்பினர் எம்.ஐ.எம்.மனாப், ஸ்தாபக உறுப்பினர் ரீ.குமார் , ஜே.நஜிமுடீன் மற்றும் செயலாளர் ஏ.எம். சிபான் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் அரச அதிகாரிகளுக்கு ஒழுக்காற்று விசாரணை பயிற்சி நெறி!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் அரச அதிகாரிகளுக்கு ஒழுக்காற்று விசாரணை நடத்தல் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நெறி மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட செயலகப் பதவி நிலை அதிகாரிகள் ,14 பிரதேச செயலகங்களில் கடமை புரியும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி நிலை சாரா அலுவலகர்களுக்கான பயிற்சி நெறியாக இது அமைந்திருந்தது.

இதன்போது ஒழுக்காற்று விசாரணைகள் எடுக்கப்படும் போது மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகள் குழுக்களாகப் பிரிந்து செயல்முறை ரீதியாக ஆராய்ந்து கருத்துக்கள் அளிக்கை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# மனித உரிமை தின வாரம் மொரவெவவில் அனுஷ்டிப்பு

(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.எச்.ஆர்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் மொரவெவ பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பன்மதவாச்சி கிராமத்தில் சிவில் அமைப்புக்களால் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

பன்மதவாச்சி விவசாய சம்மேளன கட்டடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்துரைகளும், சிறுவர்களுடைய நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.



பன்குளம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் வாழ்வுரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் வாழும் மக்களுக்கான குடியிருப்பு மற்றும் விவசாய காணிகள் வழங்கப்படவில்லை எனவும், மக்களால் காலங் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த காணிகள் வனவள பாதுகாப்பு திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் காட்டு யானை உயிர் அச்சுறுத்தல் நிலவுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், கிராம மக்கள் மற்றும் ஏ.எச்.ஆர்.சி. நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.எச்.ஆர்.சி. நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களால் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இணை வகுப்பறை முறைமை வவுனியாவில் உருவாக்கம்

(எஸ்.கீதபொன்கலன்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஒருவகைத் தீர்வாக யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையில் இணை வகுப்பறை முறைமை பின்வரும் இருசோடி பாடசாலைகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுக்குளம் ம.வி., நெடுங்கேணி ம.வி., ஓமந்தை ம.வி., கனகராயன்குளம் ம.வி. ஆகிய பாடசாலைகளிலில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

பாட ஆசிரியர்களைப் பாடசாலைகளிடையே காணொளி மூலம் பகிர்ந்து கொள்ளும் முறைமையே இதுவாகும்.

இதன் தொடக்க நிகழ்வாக கனகராயன் குளத்தில் க.பொ.த. உயர்தர உயிரியல் பாடத்துக்கு ஆசிரியர் அற்ற நிலைமையை கருத்தில் கொண்டு புதுக்குளம் ம.வி. ஆசிரியர் நேரடியாக தனது மாணவருக்கும், நிகழ்நிலை மெய்நிகர் முறைமையில் கனகராயன்குளம் பிள்ளைகளுக்கும் பாடத்தை நடத்தி வருகின்றார்.

வலயத்தின் கணித, உயர்தர கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் வாசுதீசனின் இணைப்புச் செயலாற்றுகையிலும், இரு பாடசாலைகளினதும் அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பிலும், குறித்த பாடசாலைகளின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப ஆசிரியர்களின் தொழினுட்ப ஒத்துழைப்பிலும் இவ் விசேட கற்பித்தல் ஒழுங்கு சாத்தியமாக்கப்பட்டுள்ளது.




# ஊடகவியலாளர், பிரதேசபை உறுப்பினர் கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவிப்பு

**(முஹம்மட் ரிபாக்)**

புத்தளத்தில் ஊடகவியலாளர்களும், தமிழ் பேசும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களும் கௌரவ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் மக்கள் நலன் மன்றம் இவர்களுக்கான கௌரவ பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன.

மன்றத்தின் தலைவர் மோதரவானே அமிலஸ்ரீ தேரர் தலைமையில் குருநாகல் நாரம்பொலவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மக்கள் மத்தியில் மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள், சமயத் தலைவர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இதன்போது கௌரவ பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் மற்றும் மக்கள் நலன் மன்றத்தின் கோரிக்கைக்கு அமைய, பிரதேச செயலகங்கள் ஊடாக சமூகத்தில் பணியாற்றுவோர் தொடர்பில் விவரங்கள் சேகரிக்கப்பட்ட பெயர் விவரங்களுக்கு அமைய, அவர்களின் சேவைக்கு ஏற்ப அவர்களுக்கான கௌரவ பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், புத்தளம் பிரதேச சபை உறுப்பினர்களான தேசகீர்த்தி ரிபாஸ் நஸீர் , ரிஜாஜ் மற்றும் தேசகீர்த்தி முஹம்மது ஆஷிக் ஆகியோர் “தேசபந்து” , “ சத்கோரல அபிமானி தேச கிதெளசி ஶ்ரீலங்கா புத்ர” ஆகிய கௌரவ பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் முஹம்மது அஸ்லம் “சத்கோரல அபிமானி தேச கிதெளசி ஶ்ரீலங்கா புத்ர” கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புத்தளம் பிராந்திய ஊடகவியலாளர் ரஸீன் ரஸ்மின் மற்றும் ‘ஸ்கை நியூஸ்’ செய்தி முகாமையாளர் ஆர்.எம்.சப்ராஸ் ஆகியோர் “ஊடக அபிமானி, கலா கீர்த்தி” கௌரவ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# ஊடகவியலாளரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்



இலங்கை பத்தி ரிகை பேரவையால் ஊடகவியலாளர்களின் பிள்ளைகளுக்கு இல வச பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு வங்கி கற்கைகள் நிலையத்தில் நடைபெற்றது. ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த உபகரணங்களை வழங்கி வைத்தார்.




# என்றும் மரணிக்காத காசாவின் குரல்- ரிவாட் அலாரீர்!

## காசா பல்கலை பேராசிரியர் இஸ்ரேலால் படுகொலை !!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட கவிஞர், பேராசிரியர் டாக்டர் ரிவாட் அலாரீருக்கு உலகம் வாழ் கவிஞர்களும், பாலஸ்தீனர்களும் இரங்கல் தெரிவிக்கின்றனர். புகழ்பெற்ற கவிஞர், கல்வியாளர் காசாவின் குரலாக என்றும் மரணிக்காத குரலாக விளங்கியவர்.

**என்றும் மரணிக்காத காசாவின் குரல்**

பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் சுநகயயவ யுடயசநநச) கடந்த வாரம் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து அவரது குடும்பத்தவர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பேராசிரியர் ரிவாட் அலாரீர் இஸ்ரேலின் பலத்த குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் காசாவை விட்டு நீங்காமல் அங்கேயே தங்கியிருந்தவர்.

1979 இல் காசா நகரத்தில் உள்ள ஜுயில், புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் பிறந்தார். காசாவில் வளர்ந்த அவர், நான் எடுக்கும் ஒவ்வொரு அசைவும் மற்றும் நான் எடுத்த ஒவ்வொரு முடிவும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் பொதுவாக எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறியுள்ளார்.

ரிவாட் அலாரீர் 2001 இல் காசா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் B.A. பட்டமும், 2007 இல் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் ஆயு பட்டமும் பெற்றார். அவர் புத்ரா மலேசியா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

**காசா பல்கலைக்கழக பேராசிரியர**

2015இல் காசா அன் சைலன்ஸ், பின்னர் காசா ரைட்ஸ் பேக் 2014 இல் பாலஸ்தீனிய சிறுகதைகளின் இரண்டு தொகுதிகளைத் தொகுத்துள்ளார். ஒரு நேர்காணலில் அவர் கூறுகையில் காசா ரைட்ஸ் பேக் நூல் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சாட்சியத்தை வழங்குவதற்கான முயற்சியாகும் என தெரிவித்துள்ளார்.

2007இல், காசாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் ரிவாட் அலாரீர் பேராசிரியரானார். அங்கு அவர் உலக இலக்கியம் மற்றும் படைப்பாற்றல் இலக்கியத்தை கற்பித்தார். வி ஆர் நாட் நம்பர்ஸ் என்ற அமைப்பை அவர் இணைந்துக் நிறுவி, காசாவில் உள்ள எழுத்தாளர்களை வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இணைக்கும் வழிகாட்டல் திட்டமாகும்.

2023 இஸ்ரேல்-ஹமாஸ் போரின் போது, பிபிசி, டெமாக்ரசி நவ், மற்றும் ஏபிசி நியூஸ் ஆகிய ஊடகங்களில் பணியாற்றினார். 2023 இல் ஹமாஸ்க்கு எதிரான இஸ்ரேல் தாக்குதலுக்குப் பிறகு, அவர் இந்தத் தாக்குதலை சரியாக “வார்சா கெட்டோ” எழுச்சியைப் போன்றது என்று கூறியமை பலத்த சர்ச்சயை உருவாக்கியது.

2021 இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடியின் போது அதில் அவரும் அவரது மனைவியும் 30 இற்கும் மேற்பட்ட உறவினர்களை இழந்துவிட்டனர் என்று விவரித்தார்.

நான் இறக்க வேண்டும் என்றால்
நம்பிக்கை தரட்டும்
அது ஒரு கதையாக இருக்கட்டும்...
கொலை மிரட்டல்கள்
அவருக்கு விடுக்கப்பட்டன

யூரோ-மெட் மானிட்டர் (Euro-Mediterranean H man Rights Monitor (Euro-Med Monitor) அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டது. ரிவாட் அலாரீர் வேண்டுமென்றே குறிவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. தனது குடும்பத்தினருடன் இருந்த அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ள முழுக் கட்டடத்திலும் வெடிகுண்டு வீசப்பட்டது. உறுதிப்படுத்தப்பட்ட நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் குடும்பக் கணக்குகளின்படி, இஸ்ரேலிய தரப்புகளில் இருந்து அவர் ஆன்லைனிலும் ஃபோன் மூலமாகவும் பல வாரகால கொலை மிரட்டல்களுக்கு உள்ளானமை தெரிய வந்துள்ளது.



கொல்லப்படுவதற்கு முன் தனது கடைசி நேர்காணலில், இஸ்ரேலிய குண்டுகள் பின்னணியில் வெடிக்கும் சத்தத்துடன், தன்னிடம் ஆயுதம் ஏதும் இல்லாத நிலையில், ஐ.டி.எவ். தனது வீட்டுக்கு வந்தால் தன்னைத் தற்காத்துக் கொள்வேன் என்றும், தான் உதவியற்றவனாக உணர்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய வீரர்கள் காசாவின் சிறந்த கல்வியாளர்களில் ஒருவரை, சிறந்த மனிதனும், விலைமதிப்பற்ற காசாவின் குரலைக் குறிவைத்து,

(14ஆம் பக்கம் பார்க்க)

# என்றும் மரணிக்காத...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்தொடர்ந்து சென்று கொன்றனர் என கவிஞர் மொசாப் அபு தோஹா எழுதியுள்ளார். எனது இதயம் உடைந்து விட்டது, எனது நண்பரும் சக ஊழியருமான அலரீர் அவரது குடும்பத்தினருடன் கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீனிய-அமெரிக்க பேராசிரியர் சாமி அல்-அரியன் கூறுகையில் அவர் ஒரு அற்புதமான கவிஞர், காசான்களுக்கு ஒரு தெளிவான குரல், பாலஸ்தீனததுக்கு வெளியே உள்ள மக்களுக்கு ஒரு உண்மையான பாலம். பாலஸ்தீனத்துக்குள்ளும் உலகெங்கிலும் உள்ள பலரால் அவரது இழப்பை ஜீரணிக்க முடியாது என குறிப்பிட்டார்.

2014இல் காசா ரைட்ஸ் பேக் நூல் இத்தாலிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

### வார்சா கெட்டோ எழுச்சி

வடக்கு காசாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடங்கியதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற மறுத்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு அவர் சமூக ஊடகங்களில் வீடியோவை வெளியிட்டார். கட்டடம் குலுங்குகிறது. குப்பைகள் மற்றும் துண்டுகள் சுவர்களில் மோதி தெருக்களில் பறக்கின்றன என்று அவர் எழுதினார். அத்துடன் இஸ்ரேல் மீதான ஹமாஸின் ஒக்ரோபர் 7 தாக்குதலுக்குப் பிறகு பிபிசிக்கு அளித்த பேட்டியில், அதை "சட்டபூர்வமான மற்றும் தார்மீக" என்று கூறி பரவலான சர்ச்சையை ஏற்படுத்தினார். இது சரியாக வார்சா கெட்டோ எழுச்சியைப் போன்றது என்றும் அவர் கூறினார்.

வார்சா கெட்டோ எழுச்சி என்பது 1943 இல் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்தில் நடந்த ஒரு கிளர்ச்சியாகும். மேலும் யூத மக்களை அழிப்பு முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கான நாஜி முயற்சிகளை எதிர்க்க யூதர்கள் கெட்டோவுக்குள் கடத்தப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்திப் போராடினர்.

2015 இல் நிறுவப்பட்ட பாலஸ்தீனிய இலாப நோக்கற்ற அமைப்பான "வி ஆர் நாட் நம்பர்ஸ்" இன் நிறுவனர்களில் ஒருவர் ஆவார். இது உலகெங்கிலும் உள்ள எழுத்தாளர்களுடன் காசாவில் உள்ள இளைஞர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

தற்போது சமூக ஊடகங்களில் அஞ்சலி செலுத்தும் முன்னாள் மாணவர் ஜெஹாத் அபுசலீம், அலரீரை "வகுப்பறைக்கு அப்பால் தனது மாணவர்களைப் பற்றி உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்த ஒரு வழிகாட்டி மற்றும் நண்பர்" என்று விவரித்தார்.

### காசா பல்கலைக்கழகத்தை இஸ்ரேல் அழித்தது

பாலஸ்தீனிய - அமெரிக்க எழுத்தாளரும் ஆர்வலருமான சூசன் அபுல் ஹாவா சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட வீடியோவில், "நான் சந்தித்த கனிவான, மிகவும் தாராளமான, அர்ப்பணிப்புள்ள, அற்புதமான மனிதர்களில் ஒருவர்" என்று அவர் விவரித்தார்.

நவம்பர் 1 ஆம் திகதி ட்விட்டரில் பதிவிடப்பட்ட ஒரு கவிதையில், அலரீர் எழுதினார் – "நான் இறக்க வேண்டும் என்றால், அது நம்பிக்கையைத் தரட்டும், அது ஒரு கதையாக இருக்கட்டும்". இந்தப் பதிவு பல்லாயிரக் கணக்கான முறைகள் பகிரப்பட் டிருந்தது.

ஒக்ரோபர் 11 அன்று அலரீர் கற்பித்த பல்கலைக்கழகத்தை இஸ்ரேல் அழித்தது. இது காசாவில் உள்ள ஒரு முக்கியமான ஹமாஸ் செயல்பாட்டு, அரசியல் மற்றும் இராணுவ மையம் என்று கூறியது.

புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் (Refaat Alareer) கடந்த வாரம் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டமைக்கு உலகம் வாழ் கவிஞர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டம்

(ஹஸ்பர், எஸ். கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் கல்வி பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டம் புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி திட்டமானது க.பொ.த. உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக நடத்தப்பட்டது.

எதிர்கால தொழில் முயற்சிகள், ஏனைய உயர்கல்வி வாய்ப்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், எதிர்வரும் காலங்களில் ஏற்படும் சவால்கள், தொடர்பான பல விடயங்கள் இதன்போது வளவாளர்களால் தெளிவூட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட இணைப்பாளர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி க.மதுரன், மாவட்ட இணைப்பாளர் மனிதவள அபிவிருத்தி திருமதி ஜெசினா பௌமி மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.









# ஒட்டுசுட்டான் பண்பாட்டு பெருவிழாவில் பண்டாரவன்னியன் விருது வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் துறைசார்ந்தோர் பண்டாரவன்னியன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஒட்டுசுட்டான் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று (13) இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பு நல்கிய துறை சார்ந்த பத்துப் பேருக்குப் பண்டாரவன்னியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பு நல்கிவரும் செல்வி துரைராசா றஜிதாவுக்கு இசைத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் மாயவன்சாமி புஸ்பகுமாருக்கு சிற்பத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் குலேந்திரன் யதுகுலனுக்கு குறும்படத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் செல்வி எழிலகன் சதுர்மிலாவுக்குப் பண்டாரவன்னியன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காகப் பங்காற்றும் சிவராசா சிவதீபனுக்கு நாடகத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் செல்வி தனபாலராஜ் துளசிகாவுக்கு ஓவியத்துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் சிவபாலசிங்கம் வாகீசனுக்கு இலக்கியத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் தங்கராசா நிசாந்தனுக்கு அறிவிப்புத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் சின்னப்பு சின்னத்துரைக்கு நாட்டுக் கூத்துத் துறைக்கான பண்டாரவன்னியன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பாற்றும் சண்முகம் தவசீலனுக்கு ஊடகத்துறைக்கான பண்டாரவன்னியன் விருது வழங்கப்பட்டது.















# இளம் கிரிக்கெட் வீரர் ரிஷியுதனுக்கு கனடா தமிழ்க் காங்கிரஸ் ஆதரவு





**(ந.லோகதயாளன்)**

கொழும்பு இந்துக் கல்லூரியின் 10 வயதுடைய வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரரான ரிஷியுதனின் திறமையை ஊக்குவிக்கும் விதமாக கனடா தமிழ்க் காங்கிரஸ் (CTC) தமது ஆதரவை வழங்கியுள்ளது.

சமீபத்தில் நடந்த பாடசாலை மட்டத்திலான கிரிக்கெட் போட்டியில், ரிஷியுதன் 9.4 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டம் கூட விட்டுக்கொடுக்காமல் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் .

இந்தச் சாதனையைப் பாராட்டுவதற்காக, கனடா தமிழ்க் காங்கிரஸ் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான ராஜ் தவரட்ணசிங்கம், ரிஷியுதனின் இல்லத்திற்கு நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன், கிரிக்கெட் மீதான அவரது ஆர்வத்திற்கு கனடிய தமிழ்க் காங்கிரஸ் உதவி செய்யும் எனவும் தெரிவித்தார்.

இதன் போது ரிஷியுதனின் குடும்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, கனடா தமிழ்க் காங்கிரஸ், குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான ஓட்டோவின் குத்தகையை முழுமையாகச் செலுத்தியது. இது அவர்களின் நிதிச் சுமையைக் குறைப்பதுடன், ரிஷியுதனின் கிரிக்கெட் கனவை அடைவதற்கு ஆதரவான சூழலைம் ஏற்படுத்தும்.

19 ஆவது வயதில் இலங்கை தேசிய அணிக்காக விளையாடும் ரிஷியுதனின் கனவிற்கு கனேடிய தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளிக்கும் என ராஜ் தவரட்ணசிங்கம் ரிஷியுதனின் பெற்றோரிடம் உறுதியளித்தார்.

அதேவேளை, ரிஷியுதன் போன்ற இளம் திறமையாளர்களின் கனவுகளை வளர்ப்பதில் அதன் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, கனடாவில் உள்ள தமிழ் சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி தெரிவிப்பதாக கனடா தமிழ்க் காங்கிரஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.




## தெற்காசிய கராத்தே போட்டியில் கிழக்கின் மைந்தனுக்கு வெள்ளி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நேபாளத்தில் நடைபெற்ற தெற்காசிய கராத்தே போட்டியில் இலங்கை சார்பாக கலந்துகொண்ட, கிழக்கு மாகாண வீரர் சாகர மதுசான் 21 வயதுக் குட்பட்டவர்களுக்கான 50 கிலோ கிராம் கும்தே எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவ்வருடம் கிழக்கு மாகாணத்திலிருந்து தெற்காசிய போட்டியில் கலந்துகொண்ட ஒரே ஒரு போட்டியாளர் இவர் ஆவார்.

இவருக்கான பயிற்சியினை பயிறுவிப்பாளர் சென்சே ரத்ததாஸ வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## கொழும்பு பல்கலைக் கழக விளையாட்டில் சம்பியனானது நிதி மற்றும் முகாமைத்துவ பீடம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

2023 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களின் பீடங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று, உப வேந்தர் சம்பியன் கிண்ணத்தை நிதி மற்றும் முகாமைத்துவ பீடம் சுவீகரித்தது.

பரிசளிப்பு நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் எச்.டீ.கருணாரத்ன பிரதமஅதிதியாககலந்துகொண்டு சம்பியன் கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

இப் போட்டி நிகழ்வுகளில் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் 39 போட்டிகளில் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

